செய்திப் பணிப்பாளர் /செய்திஆசிரியர் 21.03.2019

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : பெப்ருவரி 2019


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2019 பெப்ருவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அவர்கள், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2.4% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2019 சனவரி மாதம் பொருட்டு பதிவாகிய பணவீக்கம் 1.2% ஆக இருந்தது. 2019 பெப்ருவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -1.3%, 3.7% ஆக இருந்த அதேவேளை, 3.2% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2018 பெப்ருவரி மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதுமான பங்களிப்புகள் முறையே 1.6%, 1.5% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2019 சனவரி மாதத்தில் பதிவாகிய 127.3 இருந்து 2019 பெப்ருவரி மாதத்தில் 126.7 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2019 சனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 பெப்ருவரி மாதத்தில் 0.6 சுட்டெண் புள்ளி அதாவது 0.5 சதவீதப்புள்ளி குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 1.00% ஆல் குறைவடைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.54% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, பச்சை மிளகாய், அரிசி, தேங்காய், எலுமிச்சம்பழம், பெரிய வெங்காயம், வாழைப்பழம், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் மற்றும் முட்டை என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதி பப்பாசிப்பழம், புதிய மீன், மைசூர் பருப்பு, விஸ்கோத்து, வெள்ளைப்பூடு, நெத்தலிக் கருவாடு மற்றும் கோழி இறைச்சி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 பெப்ருவரி மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம், ‘கல்வி’(ரியுசன் கட்டணங்கள்), ‘சுகாதாரம்’(தனியார் மருத்துவ சோதனை, மூக்குக்கண்ணாடி, மருத்துவ/மருந்தக பொருள் கொள்வனவு என்பனவற்றுக்கான கட்டணங்கள், நிபுணர்களுக்கான உசாவுகைக் கட்டணங்கள்), ‘போக்குவரத்து’ (எரிபொருள் விலைகள், பாடசாலை செல்வதற்கான செலவு தவிர்ந்த வான் கட்டணம், பாடசாலை/முன்பள்ளி செல்வதற்கான போக்குவரத்துச் செலவு), அற்ககோல் பானங்கள், புகையிலை&தியக்கமருந்துகள்’(வெற்றிலை, சாராயம்), ‘வீடமைப்பு,நீர், மின்வலு, எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்’(பராமரிப்பு/மீள்நிருமாணம்), ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘ஆடையும் காலணியும்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதிகளின் அதிகரிப்பேயாகும். அதேநேரம், ‘தொடர்பாடல்’ பிரிவின் செலவுப் பெறுமதி இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2018 | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |
| | யூலை | 126.6 | 0.1 | 3.4 |
| | ஓகஸ்ட் | 125.4 | -0.9 | 2.5 |
| | செப்ரெம்பர் | 124.4 | -0.8 | 0.9 |
| | ஒக்ரோபர் | 124.9 | 0.4 | 0.1 |
| | நவம்பர் | 127.7 | 2.2 | 1.0 |
| | டிசம்பர் | 127.1 | -0.5 | 0.4 |
| 2019 | ஜனவரி | 127.3 | 0.2 | 1.2 |
| | பெப்ரவரி | 126.7 | -0.5 | 2.4 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்